## சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – சட்டப்படிப்பு படித்த மாற்றுத் திறனாளி பட்டதாரிகள், வழக்கறிஞர்களாக பதிவு செய்ய உரிய கட்டணம் செலுத்துவதற்கும் மற்றும் சட்டப் புத்தகங்கள் வாங்கிக் கொள்ளவும் நிதியுதவி வழங்கும் திட்டம் – 2016–17 ஆம் நிதியாண்டிற்கு திட்டத் தொடராணை மற்றும் ரூ.45,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குவது– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி. 2.1)த் துறை

அரசாணை (1D) எண்.53

நாள் : 29–07-2016
துன்முகி, ஆடி 14,
திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்க:

1. அரசாணை(1D) எண்.38 மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை, நாள் 03–11–2015.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித எண்.2862/சிபதி/2016, நாள் 23.06.2016.

*******

**ஆணை:**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, சட்டப்படிப்பு படித்த மாற்றுத் திறனாளி பட்டதாரிகள் தங்களை வழக்கறிஞர்களாக பதிவு செய்து கொள்வதற்குரிய கட்டணம் செலுத்துவதற்கும் மற்றும் தேவையான சட்டப் புத்தகங்களை வாங்கி கொள்வதற்கும் நிதியுதவி அளிக்கும் திட்டத்தினை, 2015–2016 ஆம் ஆண்டு தொடர்ந்து செயல்படுத்தவும் மற்றும் நபர் ஒருவருக்கு ரூ.3,000/– வீதம் 15 நபர்களுக்கு நிதியுதவி வழங்க ஏதுவாக ரூ.45,000/– நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், 2015–16 ம் நிதி ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான பயனீட்டுச் சான்றிதழை அரசுக்கு அனுப்பியுள்ளதாகவும், தற்போது 2016–17 ம் நிதி ஆண்டில் சட்டப்படிப்பு படித்த மாற்றுத் திறனாளி பட்டதாரிகள் தங்களை வழக்கறிஞர்களாக பதிவு செய்து கொள்வதற்குரிய கட்டணம் செலுத்துவதற்கும் மற்றும் சட்டப் புத்தகங்கள் வாங்கிக் கொள்ள நிதியுதவி வழங்கும் திட்டத்தினை, 2016–17 ஆம் நிதியாண்டில் தொடர திட்டத் தொடராணையும், மற்றும் நபர் ஒருவருக்கு ரூ.3000/– வீதம் 15 நபர்களுக்கு நிதியுதவி வழங்க ஏதுவாக ரூ.45,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குமாறும் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை அரசு ஏற்று, சட்டப்படிப்பு படித்த மாற்றுத் திறனாளி பட்டதாரிகள் தங்களை வழக்கறிஞர்களாக பதிவு செய்து கொள்வதற்குரிய கட்டணம் செலுத்துவதற்கும் மற்றும் தேவையான சட்டப் புத்தகங்கள் வாங்கிக்

கொள்ளவும் நிதியுதவி அளிக்கும் திட்டத்தினை 2016–2017 ஆம் ஆண்டு தொடர்ந்து செயல்படுத்திட திட்டத் தொடராணையும் மற்றும் நபர் ஒருவருக்கு ரூ.3000/– வீதம் 15 நபர்களுக்கு நிதியுதவி வழங்க ஏதுவாக ரூ.45,000/– (ரூபாய் நாற்பத்தைந்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் –101. மாற்றுத் திறனாளிகள் நலன் – திட்டம் சாராதது–I. -CT மாற்றுத் திறன் படைத்த சட்டப் பட்டதாரிகள் வழக்குரைஞர்களாகப் பதிவு செய்தவற்குரிய கட்டணம் செலுத்துவதற்கும், சட்டப் புத்தகங்கள் வாங்குவதற்கும் நிதியுதவி –09. உதவித் தொகை –01. நடப்புச் செலவுக்கான உதவித் தொகை".

(த.தொ.கு.2235 02 101 CT-0918)

5. இத்திட்டத்தின் கீழ் பயனாளிகள் ஏற்கனவே நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. மேற்கண்ட தொகையினை பெற்று வழங்க மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.38508/நிதி(சந)/2016, நாள் 25.07.2016ல் கண்டுள்ள ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18 மற்றும் பெயரில்
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.

**நகல்:**
நிதி (சந)த் துறை, சென்னை–9
மாண்புமிகு அமைச்சர்(சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்) அவர்களின், சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

29/7/16

பிரிவு அலுவலர்.

29/7/16